சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான மேல்நிலைப்பள்ளியில் செயல்படும் இடைநிலை ஆசிரியர் பயிற்சி மையத்தில் 2005 – 2006 முதல் 2008 – 2009 ஆம் ஆண்டு வரை பயிற்சி முடித்த கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் ஆசிரியர் பணி நியமனம் வழங்கி ஆணை –வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத்(1) துறை

அரசாணை(நிலை) எண்.16 நாள். 28–5– 2010

வைகாசி 14, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது.

1. அரசு ஆணை (நிலை) எண்.99, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள் 26.02.1988.
2. அரசு ஆணை (நிலை) எண்.619, பள்ளிக் கல்வித்துறை, நாள் 23.06.1993.
3. அரசு ஆணை (நிலை) எண்.82, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 21.07.2009.

மேலும் படிக்க:

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க.எண்.5060/மா.தி.ந3(1) நாள் 28.05.2010.

-------

**ஆணை.**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பிற்கான இட ஒதுக்கீடு மற்றும் கல்வி நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சதவீதம் இட ஒதுக்கீடு செய்து வெளியிடப்பட்ட அரசாணைக்கு, பள்ளிக் கல்வித்துறையில் ஆசிரியர் பணியிடங்களில் செவித் திறன் குறையுடையோர் மற்றும் வாய் பேச இயலாதோருக்கு என ஒதுக்கப்பட்ட, 1 சதவீத இட ஒதுக்கீட்டினை மாற்றம் செய்து, அதனை பார்வையற்றோருக்கு 2 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே 3–ல் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் இயங்கும் சிறப்புப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளதால் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகளில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த 77 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு சில விதி முறைகளைத் தளர்வு செய்து, சில நிபந்தனைகளின் பேரில் ஒரு தடவை மட்டும் சிறப்பினமாக இடைநிலை ஆசிரியர்களாக பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

3. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் 2005–06 முதல் 2008–09 வரையிலான காலத்தில் மேற்படி பயிற்சியை முடித்த கை, கால் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகள் 93 பேர் என்றும், அவர்களுள் 21 பேருக்கு ‘ஆசிரியர் தேர்வு வாரியம்’ மூலம் பணியிடம் கிடைக்க பெற்றதாகவும், மீதம் 72 பேருக்கு பணியிடம் வேண்டி காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாகவும் எனவே, மேற்படி கை, கால் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கு, அவர்களுடன் பயின்ற பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு விதிகளைத் தளர்த்தி பணி நியமனம் வழங்கப்பட்டது போலவே, சிறப்பு இனமாக விதிகளைத் தளர்த்தி இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் வழங்கும்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த 77 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கும் தமிழக அரசு ஏற்கனவே சிறப்பு ஆணை மூலம் வேலை வழங்கியது போல, அதே இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் அதே காலத்தில் அவர்களோடு பயிற்சி முடித்த கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 72 பேர் தங்களுக்கும் உடனடியாக வேலை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்ததைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களின் கோரிக்கையை இன்னும் ஒரு வார காலத்திலே நிறைவேற்றுவதாகவும், அவர்களுக்கான ஆணை உடனே பிறப்பிக்கப்படும் என்றும் உறுதியளித்தார்கள்.

5. இக்கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்த பின்னர் 2005–06 முதல் 2008–09 வரையிலான கல்வியாண்டுகளில் பூவிருந்தவில்லி அரசு பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாக பணி அமர்த்திட சிறப்பு ஆணை வெளியிடப்பட்டது போன்று, அதே ஆண்டுகளில் அவர்களுடன் மேற்படி இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளையும் சிறப்பினமாக பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாக பணியமர்த்திட அவர்களுக்கு

(i) வேலை வாய்ப்பகமின்றி நேரடி நியமனம் அளிப்பதற்காக தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகளுக்கான பொது விதிகள்– விதி 10 (A) மற்றும்

(ii) விதி 22ன்படி பணி நியமனங்களுக்கான இட ஒதுக்கீடு / இன சுழற்சி முறைக்கு விலக்களித்தல் (Communal reservation);

ஆகிய விதிகளைத் தனியர்கள் பொருட்டு தளர்வு செய்து பள்ளிக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் ஆரம்பப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாக பணி நியமனம் வழங்கி அரசு ஆணையிடுகிறது 2008–09ம் ஆண்டுக்கு பிறகு மேற்படி பள்ளியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களுக்கு இந்நேர்வு பொருந்தாது எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
செயலர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9.

<u>நகல்:-</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.